Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 90/2020** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW 14** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | அப்பாஸ் |
| Father/Husband Name | : | ஹிராஜான் |
| Village | : | காயக்காரி அம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கரும்பு ஜுஸ் கடை |
| Religion | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.01.2026

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் நகர் காயக்காரி அம்மன் கோவில் தெருவில் வசித்து இராமநாதபுரம் அண்ணாசிலை மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்கு நடுவில் கரும்பு ஜுஸ் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன மீனாட்சி சுந்தரம் மகன் ராஜாவை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. ஜெகன் தியேட்டருக்கு அருகில் கொலை நடந்தது சம்மந்தமாக கேணிக்கரை காவல் ஆய்வாளர் கொலை நிகழ்ந்த 5 நாட்கள் கழித்து என் கடைக்கு வந்து ஒரு கையெழுத்து போடும் படி சொன்னார். நான் போட்டு கொடுத்தேன்.

போலீசாரிடம் நான் வேறு எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. (இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலீசார் விசாரணையில் கடந்த 19.08.2019 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் எனது கரும்பு ஜுஸ் கடையில் இருந்தேன் என்றும் அப்போது கடைக்கு கிழக்கு பக்கம் அலறல் சத்தம் கேட்டது என்றும் உடனே நானும் அருகிலிருந்த கடைத்தாரர்களும் அங்கு சென்று பார்த்தோம் என்றும் அங்கு ராஜா என்பவர் வலது முன்கை , முதுகின் இடது பக்கம் ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் காயம் பட்டு கிடந்தவரை நானும் அருகிலிருந்த கடைக்காரர்களும் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் மருத்துவமனையில் காயம்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி இறந்ததுவிட்டார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரியை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.